## பொலிஸ் வெகுமதி நிதியம் - 2017

---

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 73(4) ஆம் பிரிவு (அதிகாரம் 65) உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாகத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முற்பணங்கள் வழங்கப்படும் போது வழங்கியிருந்த மொத்த முற்பணத் தொகையும் செலவினம் என இனங்கண்டு கணக்கீடு செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த முற்பணத் தொகையில் 2018 ஆண்டின் போது ரூபா 41,169,710 தொகை காசாகத் தீர்த்திருந்தமையினால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 819,738,597 தொகை என கணித்து கணக்கீடு செய்திருந்த போதிலும், கணக்காய்வினால் கணக்கிடப்பட்டதன் பிரகாரம் அந்த வருமானம் ரூபா 818,254,231 தொகையாகக் காணப்பட்டமையினால் நிதிக்கூற்றுக்களின் வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய முதலீட்டு வருமானம் ரூபா 1,484,366 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது விதந்துரைக்கப்பட்டிருந்த 03 விஷேட வெகுமதிகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 720,000 இற்கான தொகையில் ரூபா 410,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. செலுத்தப்பட வேண்டிய ரூபா 310,000 இற்கான பெறுமதி வருமானக் கூற்றில் விஷேட வெகுமதி செலவுகளில் மற்றும் நிதி நிலைமை கூற்றில் செலுத்த வேண்டிய விஷேட வெகுமதிகளின் பெறுமதியில் இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் இரண்டு விஷேட வெகுமதிகள் தொடர்பாக செலுத்த வேண்டிக் காணப்பட்ட ரூபா 600,000 தொகைக்கான பெறுமதி ஆண்டின் போது செலுத்தியிருந்ததுடன் அதனை செலுத்த வேண்டிய செலவுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக வருமானக் கூற்றில் விஷேட வெகுமதிச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 07 விஷேட வெகுமதிகள் தொடர்பாக விதந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 511,500 தொகைக்கான மொத்த வெகுமதி தொகையில் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 300,750 தொகை மாத்திரம் விஷேட வெகுமதிச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக வருமானக் கூற்றில் விஷேட வெகுமதி செலவுகள் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் செலுத்த வேண்டிய விஷேட வெகுமதிகளின் பெறுமதி ரூபா 210,750 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு தொடர்பாக 15 நீதிவான் நீதிமன்றங்களில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 2,788,453 இற்கான தண்டப்பணமொன்று 2018 ஆண்டின் போது கிடைத்திருந்த போதிலும் அவை 2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வருடாந்த தண்டப்பண வருமானம் மற்றும் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் என இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் அட்டவணை இலக்கம் 03 இல் காட்டப்பட்டுள்ள 12 நீதிமன்றங்களின் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் நீதிமன்றத்தினால் பெற்றுக்கொண்ட மீதிகள் உறுதிப்படுத்தல்களுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 4,401,626 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது தண்டப்பணப் பெறுவனவுகள், நீதிவான் நீதிமன்ற அறிக்கைகள் மற்றும் பொலிஸ் வட்டார அறிக்கைகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 1,182,666 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 08 மாவட்ட செயலகங்களில் இருந்து கணக்காய்விற்கு நேரடியாக வழங்கியிருந்த வாகனத் தண்டப்பண வருமானக் கூற்றுக்கள் மற்றும் காசேடு மற்றும் மோட்டார் வாகன வருமானப் பேரேட்டுக் கணக்குகளுடன் இணக்கஞ் செய்த போது கூட்டுத்தொகை ரூபா 2,136,496 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலிஸ் அனுசரணை நிதியத்திற்கு முற்பணம் என வழங்கியிருந்த ரூபா 2,000,000 தொகை 18 வருடங்களை விட மிகையான காலம் முதல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) விஷேட சுற்றிவலைப்புகளுக்காக நிதியத்தில் இருந்து வெகுமதிகள் செலுத்தும் போது வழக்குகள் முடிவடைவதற்கு முன்னர் 50 சதவீதம் செலுத்தப்படுகின்றது. மீதி வெகுமதித் தொகையை செலுத்துவதற்கு நீதிமன்று வழக்கு விடயங்கள் முடிவடையாமையினால் 251 கோவைகள் தொடர்பாக 01 வருடமும் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியை சேர்ந்த ரூபா 57,719,711 இற்கான செலுத்த வேண்டிய விஷேட வெகுமதிகள் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் காணப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,663,672,229 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,272,679,612 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 390,992,617 இற்கான வளர்ச்சி ஒன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களுக்கான வட்டி பெறுவனவுகள் ரூபா 350,486,731 இனால் அதிகரித்திருந்தல் மேற்கூறிய வளர்ச்சிக்காக முக்கிய காரணமாக உள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயலாற்றுகையும் மீளாய்வும்

வெகுமதிகள் வழங்குவதன் மூலம் பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் அதனை விட குறைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகள் வினைதிறனான முறையில் மேற்கொள்ளப்படுவதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை அதற்காக ஊக்குவித்தல் மற்றும் பொலிஸுக்குத் தேவையான தகவல்கள் வழங்கும் சிவில் நபர்களுக்காக வெகுமதி வழங்குதல் நிதியத்தினால் மீளாய்வாண்டின் போது முக்கிய விடயமொன்றாக நிறைவேற்றப்படடிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அனைத்து பொலிஸ் வட்டாரங்களுக்கும் பொது கட்டுநிதி என ரூபா 514,806,255 தொகையும், மோட்டார் வாகன கட்டுநிதியாக ரூபா 196,778,225 தொகையும் வழங்கியிருந்த போதிலும் வருட இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 41,036,704 தொகை மற்றும் ரூபா 22,319,356 தொகை ஆக பொலிஸ் வெகுமதி நிதியத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. வட்டார உத்தியோகத்தர்களின் வெகுமதி வழங்கும் தேவைகளை இனங்கண்டு பணம் வழங்குதல் மற்றும் வெகுமதிகள் வழங்கும் செயற்பாடு வினைத்திறமையுடன் மேற்கொள்ளப்படாமை வருடாந்த வெகுமதிக் கட்டுநிதி திருப்பி அனுப்புவதற்கு காரணமாக இருந்தது. வட்டார மட்டத்தில் அவதானிக்கப்பட்ட பிரதான விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான மிகக் கூடிய வெகுமதிக் கட்டுநிதி ஆகிய ரூபா 54.04 மில்லியன் தொகை கம்பஹா வட்டாரத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. ரூபா 48.04 மில்லியன் தொகையான பொதுக் கட்டுநிதியில் ரூபா 9.90 மில்லியனும் ரூபா 6 மில்லியனுக்கான மோட்டார் போக்குவரத்து கட்டுநிதியில் ரூபா 2 மில்லியன் தொகையும் வெகுமதிகள் வழங்குவதற்காக பயன்படுத்தப்படாமையால் காரணத்தினால் வருட இறுதியில் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(ii) இரண்டாவது மிகக் கூடிய வெகுமதி கட்டுநிதியமாகிய ரூபா 49.43 மில்லியன் தொகை கொழும்பு வட்டாரத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. ரூபா 21.65 மில்லியன் தொகைக்கான பொதுக் கட்டுநிதியில் ரூபா 5.63 மில்லியனும் ரூபா 27.78 மில்லியனும் மோட்டார் போக்குவரத்து கட்டுநிதியில் இருந்து ரூபா 5.37 மில்லியன் தொகை வெகுமதி செலுத்துவதற்காக பயன்படுத்தியிருக்காமையால் வருட இறுதியில் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(iii) அனுராதபுர வட்டாரத்திற்கு ரூபா 32.03 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 23.41 மில்லியன் தொகையான பொதுக் கட்டுநிதியில் ரூபா 5.31 மில்லியன் தொகை வெகுமதிகள் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்காமையால் வருட இறுதியில் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டார் போக்குவரத்து தண்டப்பண வருமானத்தில் வெகுமதி செலுத்தும் போது 2011 செப்டம்பர் 12 திகதிய பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை இலக்கம் 2304/2011 இன் பிரகாரம் பொலிஸ் நிலையங்கள் மோட்டார் போக்குவரத்து பகுதியின் உத்தியோகத்தர்களுக்கு அந்த அலுவலர்களின் பதவிகளின் பிரகாரம் ரூபா 1200 முதல் ரூபா 3000 வரை உச்சஅளவு மாதாந்த வெகுமதி தொகை கொடுப்பனவுகள் நடைபெறுகின்றது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாதாந்த வெகுமதித் தொகை காலத்திற்கு ஏற்ற விதத்தில் மற்றும் வருமானத்திற்கு ஒப்பாக திருத்தப்படாமையால் மோட்டார் போக்குவரத்து தண்டப்பண வருமானத்தில் 72 சதவீதத்தை விட மிகையான தொகையொன்று கடந்த மூன்று வருடங்கள் பூராகவும் மீதியாக இருந்துள்ளது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. | 2015<br>ரூபா. |
|---|---|---|---|
| மோட்டார் போக்குவரத்து தண்டப்பண பெறுவனவுகள் | 668,025,613 | 643,700,294 | 535,368,163 |
| மோட்டார் போக்குவரத்து வெகுமதி கொடுப்பனவுகள் | 174,458,869 | 152,474,691 | 148,163,969 |
| மீதி | 493,566,744 | 491,225,603 | 387,204,194 |
| மீதி சதவீதத்தில் | 73.88 | 76.31 | 72.32 |

(ii) மீளாய்வாண்டின் போது அஞ்சல் திணைக்களத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 645,580,931 தொகை மற்றும் மாவட்ட செயலகங்களில் இருந்து கிடைத்திருந்த ரூபா 22,444,682 தொகை மோட்டார் போக்குவரத்து தண்டப்பண வருமானமென கணக்கீடு செய்திருந்த போதிலும் அந் நிறுவனத்தினால் வழங்கியிருந்த வெகுமதி தொகையின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பொலிஸ் நிலையங்கள் மற்றும் வட்டார மட்டத்தில் மோட்டார் போக்குவரத்து தண்டப்பணம் வருமான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளும் உள்ளக நடைமுறையொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

(இ) 03 அரசாங்க வங்கிகளில் முதலீடு செய்திருந்த நிலையான வைப்புக்கள் மற்றும் அதன் மூலம் உழைக்கப்பட்ட வட்டி வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி | | |
|---|---|---|---|
| | 2017<br>ரூபா<br>மில்லியன் | 2016<br>ரூபா<br>மில்லியன் | 2015<br>ரூபா<br>மில்லியன் |
| நிலையான வைப்புக்கள் | 8,123 | 6,750 | 5,533 |
| நிலையான வைப்புக்கள் மீது வட்டி | 819 | 469 | 325 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டின் போது நிதியங்கள் உழைத்திருந்த மொத்த வருமானம் ரூபா 4,408 மில்லியன் ஆக இருந்தது. அக்காலப்பகுதியில் நிதியத்தின் முதலீடுகள் ரூபா 2,590 இனால் வளர்ச்சியடைந்திருந்தது. இதன் பிரகாரம் மொத்த வருமானத்தில் 58 சதவீதம் முதலீடுகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. நாடு பூராகவும் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் சுற்றிவலையத்தல்களுக்காக நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தில் 50 சதவீதம் மற்றும் மோட்டார் போக்குவரத்து தண்டப்பணத்தில் 40 சதவீதம் என வருமானம் கிடைக்கும் நிதியத்தினை நிறுவும் குறிக்கோளாகிய பொலிஸ் உத்தியோகத்தர்களை ஊக்கப்படுத்துவதற்காக வெகுமதி பணம் வழங்குதல் மற்றும் அவர்களின் நலன்புரி விடயங்கள் மேற்கொள்வதற்காக மொத்த வருமானத்தின் ரூபா 1,471 மில்லியன் எனப்படும் 33 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை முறையே ரூபா 433.47 மில்லியன் தொகை, ரூபா 386.09 மில்லியன் தொகை, ரூபா 325.67 மில்லியன் தொகை, ரூபா 469.25 மில்லியன் தொகை மற்றும் ரூபா 819.73 மில்லியன் தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 2,434.21 மில்லியன் தொகை நிலையான வைப்புக்கள் மீது வட்டிவருமானம் என உழைத்திருந்த போதிலும் இந்த வருமானம் நிதியம் நிறுவுவதற்கான குறிக்கோளினை நிறைவேற்றிக்கொள்வதற்காக பயன்படுத்தியது எவ்வாறு என்பது தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் மோட்டார் போக்குவரத்து வருமான தண்டப்பண வருமானம் மதிப்பீடு செய்திருக்காத போதிலும் உள்ளவாறான மோட்டார் வாகன தண்டப்பண வருமானம் ரூபா 668,025,614 தொகையாக இருந்தது. அதே போல் பலவின வருமானம் என ரூபா 550,000,000 தொகை மதிப்பீடு செய்திருந்த போதிலும் நிதியத்திற்கு பலவின வருமானம் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) பாதீட்டில் ஏற்பாடுகள் செய்திருக்காத நீர் சுத்திகரிப்பு செயற்திட்டத்திற்காக வழங்கள் பகுதிக்கு மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கான வெகுமதிகள் கொடுப்பனவு செய்வதற்காக பொலிஸ் விளையாட்டு நிதியத்திற்கு முறையே ரூபா 35,479,452 தொகை மற்றும் ரூபா 32,595,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கொடுப்பனவு கட்டுப்பாடு | நீதிமன்ற விடயங்கள் முடிவடைந்து 03 ஆண்டுகள் முதல் 06 ஆண்டுகள் வரை தாமதமடைந்து விஷேட வெகுமதிகள் வழங்கியிருந்த 06 சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டமை. |
| (ஆ) | வருமானம் சேகரித்தல் | தபால் திணைக்களத்தில் இருந்து மாதாந்தம் பெற வேண்டிய ரூபா 30 மில்லியன் முதல் ரூபா 60 மில்லியன் வரையான மோட்டார் வாகன தண்டப்பண வருமானம் நிதியத்திற்கு கிடைக்கும் போது 2 மாதங்கள் முதல் 5 மாதங்கள் வரை தாமதம் காணப்படல். |
| (இ) | வெகுமதி காசோலைகள் ஒப்படைத்தல் | வெகுமதிகளுக்கு உரித்துள்ள உத்தியோக த்தர்களுக்கு காசோலைகளை ஒப்படைத்தல் வினைத்திறமையுடன் மற்றும் பிழையற்ற முறையில் நடைபெறாமையினால் 2017 ஆண்டின் போது 201 உத்தியோகத்தர்களுக்கு உரித்தான விஷேட நன்கொடைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,435,500 தொகைக்கான காசோலைகள் அரசாங்க வருமானத்திற்கு எடுத்தல். |
| (ஈ) | கணக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய 151 நாட்குறிப்புப் பதிவுகளுக்காக நாட்குறிப்பு உறுதிச் சீட்டுகள் பயன்படுத்தியிருக்கவில்லை. |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | முன்னேற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தினால் பாதீடு அடிக்கடி திருத்தப்பட்டிருந்தது. |